| O.S.No. 80/2024 | PW1: திரு. அன்பழகன் த/பெ. திரு. வரதன் | 31-07-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. இறந்துபோன கங்காதரன் எனக்கு உறவினர் என்பதால் கடந்த 25 வருடமாக தெரியும். கங்காதரன் கீழ்புதுப்பாக்கம் ராமதாஸ் தெருவில் அவரது குடும்பத்துடன் வசித்து வந்தார். நான் கங்காதரனுக்கு 20.03.2021ல் என்னுடைய வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்த சமயத்தில் எனது துணைவியார் இருந்தார், கங்காதரரின் மனைவியும் இருந்தார். தாவா புரோநோட்டில் கங்காதரனின் மனைவி சாட்சி கையெழுத்து போடவில்லை. புரோநோட்டில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா புரோநோட்டை யார் எழுதியது என்று எனக்கு தெரியாது (சாட்சியானவர் மீண்டும் புரோநோட்டினை நான்தான் எழுதினேன் என்று கூறுகிறார்).

2. தாவா புரோநோட்டில் எழுதியவர் என்று என்னுடைய கையெழுத்து போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எழுதியவர் என்று ஸ்ரீதர் கையெழுத்து போட்டுள்ளார். நான் செல்ல ஸ்ரீதர் பாண்டினை எழுதினார். பாண்டினை நான்தான் எழுதினேன் என்று முதலில் சாட்சி சொல்லிவிட்டு தற்போது ஸ்ரீதர் எழுதியதாக மாற்றி கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் நீங்கள் சொல்லி ஸ்ரீதர் எழுதியிருந்தால் யார் யார் பாண்டில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்ற விவரத்தை நான் சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. மார்ச் 2020 முதல் மார்ச் 2021 வரை உலகம் முழுவதும் கொரோனோ பெருந்தொற்று இருந்து வந்தது என்றால் சரிதான்.

3. இறந்துபோன கங்காதரன் 2012ம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை சர்க்கரை நோய்க்கு சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரிதான். அவருக்கு ஒரு கட்டை விரல் எடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். கங்காதரன் எப்போது இறந்தார் என்றால் அவர் இறப்பு பற்றி எனக்க தெரிவிக்கவில்லை. கங்காதரன் வாங்கிய பணத்திற்கு 4 மாதம் வரை வட்டி செலுத்தினார். அந்த வட்டியினை நேரடியாக செலுத்தினார். எனது வழக்கில் இறந்துபோன கங்காதரன் எந்த

தொகையும் செலுத்தவில்லை என்று சொல்லியுள்ளது தவறு என்றால் அவர் வட்டி செலுத்தியதற்கு பிறகு செலுத்தாததைத்தான் நான் சொல்லியுள்ளேன்.

4. கங்காதரன் கடன் வாங்கிய விஷயத்தை அவரது குடும்பத்தாரிடம் சொல்லியுள்ளீர்களா என்றால் கங்காதரன் இறப்பதற்கு முன்பாகவே 4 முறை குடும்பத்தாரிடம் பணம் கேட்டுள்ளேன். நான் கங்காதரனுக்கு எந்தவொரு பணமும் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு கொடுத்திருந்தால் கங்காதரன் இறப்பதற்கு முன்பாகவே அவருக்கு எதிராக அறிவிப்பு கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. 4 முறை பிரதிவாதிகளிடம் கங்காதரன் வாங்கிய கேட்டேன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும், கங்காதரன் பற்றிய விஷயமே பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றாலும் சரியல்ல.

5. 1-ம் பிரதிவாதியின் தந்தை லிங்கம் என்பவரை பற்றி எனக்கு நன்கு தெரியும். அவர் செய்யாரில் பிரபலமானவர்தான். அவர் செங்கல் சூலை நடத்தி வருகிறார் என்று எனக்க தெரியும், அவருக்கு 16 ஏக்கர் நிலம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. தாவா புரோநோட்டு கடனை தவிர இறந்துபோன கங்காதரன் என்னிடம் வேறு எந்த கடனும் வாங்கவில்லை. இறந்த கங்காதரனுக்கு போதுமான வசதி இருந்தது என்றாலும், அவர் என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல.

6. கங்காதரன் வாங்கிய கடனை அவரது வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகள் அடைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோனவரின் சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு வாரிசு அடிப்படையில் சென்றிருந்தால் மட்டுமே இறந்தவரின் கடனை அடைக்க பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்கள் என்றாலும், அவ்வாறு எந்த சொத்துக்களும் இல்லாத நிலையில் பிரதிவாதிகள் கடனை அடைக்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல, பிரதிவாதிகள்தான் சொத்தினை விற்று கடனை அடைக்கிறோம் என்று சொன்னார்கள்.

7. மார்ச் 2020 முதல் இறக்கும் வரை கங்காதரன் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே சிகிச்சை பெற்று வந்தார் என்றாலும், அதனால் என்னிடம் கடன் வாங்கிக்கொண்டு அதற்கு அவர் பாண்டு எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. பாண்டில் உள்ள கையெழுத்து கங்காதரனுடையது என்பதனை நிரூபிப்பதற்கு மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. இறந்துபோன கங்காதரனுக்கு ரூ.4,00,000/- கடன் கொடுத்ததாக ஒரு பொய்யான பாண்டினை உருவாக்கி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாண்டு மறுபயனற்றது என்பதால் எனது தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.07.31 12:33:40 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**